RESEARCH ARTICLE

DOI:10.34256/irjt22s115

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ஆழ்வார்கள் கண்ட மானுடம்

## க. இராஜாசீநிவாசன் [அ, *], அ. கணேசன் [ஆ]

[அ] தமிழ்த்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்-608002, தமிழ்நாடு, இந்தியா.

[ஆ] தமிழ்த்துறை, பொ.செ.பு.த. எம்.ஜி. ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சீர்காழி, புத்தூர்-609108, தமிழ்நாடு, இந்தியா.

# Azhvarkal Kanda Manudam

## K. Rajasrinivasan [a, *], A. Ganesan [b]

[a] Department of Tamil, Annamalai University, Chidambaram-608002, Tamil Nadu, India.

[b] Department of Tamil, Ponmana Chemmal Puratchi Thalaivar MGR Government Arts and Science College, Sirkali-609108, Tamil Nadu, India.

* Corresponding Author: rajasrinivasan.23470@gmail.com

Received: 15-03-2021
Revised: 20-12-2021
Accepted: 21-12-2021
Published: 10-02-2022

Check for updates

**ABSTRACT**

World natural history is based on anthropology. Man grows little by little and becomes civilized and sets his course of life. He lives based on the elements of that life. He needs the truth of the best scholars to shine in that life. There are many ideas that Alvars have taken for human development to fulfill that need. The purpose of this study is to examine the pride and culture of non-caste life, instability of life, admiration, racial unity, hospitality, love, and chastity.

**Keywords:** Servant Respect, Worldliness, Equality, Charity Specialization, Racial Unity, Chastity.

## முன்னுரை

உலக உயிர்கள் அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவையே! அவ்வுயிர்கள் அனைத்தும் கடைசியில் இறைவனை அடைவதற்குரிய வழியினை உணர, பல பொருட்களை வழங்கியுள்ளான். அப்பொருட்களுள் சில கண்ணுக்குப் புலப்படுவன, சில கண்களுக்குப் புலப்படாதன. கண்ணுக்குப் புலப்படாதனவற்றுள் ஒன்று மனம். இம்மனமும் உடலும் பின்னிப் பிணைந்தவை. ஒன்று துயருற்றால் மற்றது துயர்வுரும். மனித உடலை இயக்குவது மனமே. எனவே மனம் உயர மனிதனும் உயர்வான். இதனை,

“வெள்ளத் தனைய மலர்நீட்டம், மாந்தர்தம்

உள்ளத் தனையது உயர்வு” (குறள்-595)

என்பார் வள்ளுவர். இத்தகைய மனிதர்களுக்காக அறக்கூறுகளைக் கூற அறநூல் பல உண்டு. ஆயினும், அருட்கருத்துகளைக் கூறவந்த ஆழ்வார்களும் இம்மனிதர்கள் உய்வதற்கு வழிசொல்லும் பாங்கில் தமது பாசுரங்களில் அருளோடு அறமும் இணைத்து கன்னலொடு தேனும் கலந்து மனிதம் வளர வாயார வழங்கியுள்ளனர். அவ்வகையில் வைணவம் தழைத்தோங்க வந்த ஆழ்வார்கள் தமது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் மூலமாக இறைவழியில் மனித செயல்நிலை என்னும் மனிதம் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

## அடியார்தம் அடியார்அடி போற்றும் ஆழ்வார்கள்

ஆழ்வார்கள் தொண்டக் குலத்தை வளர்த்தவர்கள். தொண்டக்குலம் வைணவக்குலம், அதனில் சாதி, உயர்வு, தாழ்வு வேறுபாடு கிடையது. திருமாலிடம் அன்பு செய்து தொண்டு பூனும் அடியாரே அக்குலத்தார் "அந்த நீக்கமில்லா அடியார் தம் அடியார்க்கு அடியார் எம் சகோதரர்கள். அவர்க்கே குடிகளாய்ச் செல்லும் நல்ல கோட்டுபாடுடையேன் யான்" (திருவாய்மொழி 8.10.10) என்ற நம்மாழ்வார் கூற்று இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும் (Naalayira Divya Prabandham, 2007).

தொண்டக்குலத்தினா் பண்டைக்குலத்தைத் தவிர்த்து தொண்டக் குலத்தினராக ஆனவர்கள் ஆழ்வார்கள். இதனை, "இருடீகேசன் தனக்குத் தொண்டக் குலத்தில் உள்ளீர்! வந்து அடிதொழுது, ஆயிரம் நாமம் சொல்லி பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே" (பெரியாழ்வார் திருமொழி-5) என்ற பெரியாழ்வார் கூற்றிலிருந்து அறியலாம் (Naalayira Divya Prabandham, 2007). மேலும், தேக சம்பந்தந்தால் வரும் சாதி சம்பந்தத்தை விட்டுத் தொண்டக் குலத்தினரான பின்னா்தான் இருடீகேசனுக்குப் பல்லாண்டு பாடும் தகுதியுடையராகின்றனா் என்பார் பெரியாழ்வர். இதனால் ஆழ்வார்கள் சாதி வேறுபாடற்றவர்கள் என்பது புலனாகிறது.

"தூராத மனக்காதல் தொண்டா் தங்கள் குழாம் குழுமித்திருப்புகழ்கள் பலவும் பாடி" (பெருமாள் திருமொழி 1-9) என்கிறார் குலசேகராழ்வார் (Periyavachan pillai, 1996). அவர் மேலும் "வண்பொன்னிப் பேராறுபோல் வரும் கண்ணநீர் கொண்டு அரங்கனார் கோயில் திருமுற்றம் சேறு செய் தொண்டர் சேவடிச் செழுஞ்சேறு என் சென்னிக்கு அணிவனே. (பெருமாள் திருமொழி) என்று மேலும் அவா் அவாவினை விளம்புகின்றார் (Periyavachan pillai, 1996). தொண்டரடிப்பொடியாழ்வரும்,

"பழுதிலா ஒழுகலாற்றுப் பல சதுப்பேதி மார்கள்,

இழிகுலத் தவா்களேலும் எம் அடியார்கள் ஆகில்

தொழுமினீர், கொடுமின், கொள்மின் என்று நின்னொடும் ஒக்க

வழிபட அருளினாய் போல் மதிள் திருவரங்கத் தானே" (Periyavachan pillai, 1996)

என்று "மதிள் திருவரங்கத்தானே! நீ, ஆகமத்திலே பிரமன் முதல் உங்கள் அளவும் தொடா்ந்து வருகிற பரம்பரையில் ஒரு குற்றமும் இல்லாதவர்களாயும், நான்கு வேதங்களையும், ஓதினவர்களாயும் உள்ள சதுா்வேதிகளே! (நீங்கள் தான் வணங்கத்தக்கவா், மற்றையோர் வணங்குகிறவா் என்று நீங்கள் பாவிக்கலாகாது) எனக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தால் தாழ்ந்த வகுப்பில் பிறந்தார்களேயாயினும் நீங்கள் (அவர்களைத்) தொழுங்கள் உங்களிடமுள்ள சிறந்த கல்விப்பொருளை அவர்களுக்கு உபதேசியுங்கள், அவர்களிடத்தில் உள்ள விசேட அா்த்தங்களை உண்டாகில் கேட்டுக்கொள்ளுங்கள் என்று உபதேசித்ததோடு எனக்குச் சமமாக அவர்களை ஆராதியுங்கள் என்று உரைத்தருளினாயே" என்று தொண்டரடிப் பொடியாழ்வார் அறிவுரை பகர்கிறார். மேலும், "தொண்டரடிப்பொடி என்றும் அடியனை அளியன் என்றருளி உன்னடியார்க்கு ஆட்படுத்தாய் என்றும் வேண்டுகிறார், இதன் மூலம் இவர் மானுடம் போற்றி வாழ்ந்தார் என்று புலனாகிறது.

## ஆழ்வார்களின் உலகியலுணர்வு

### வாழ்க்கை நிலையாமை

"ஊரெல்லாம் கூடிஒலிக்க அழுதிட்டுப்

பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு

சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுருட்டிட்டு

நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே" (Periyavachan pillai, 1996)

ஒருவன் இறந்தவுடன் ஊா்மக்களும் உறவினா்களும் ஓவென ஒலித்து அழுவார்கள். அவனுக்கு இட்ட பேரினை மறந்துவிட்டு உடலுக்கு மட்டும் பிணம் என்று பேர் சொல்லி வருந்துவார்கள். பின்னே

தூரை-காரை என்னும் முட்செடிகள் பரவியுள்ள சுடுகாட்டுக்குப் பிணத்தை எடுத்துச் சென்று தீயிலிட்டு சுடுவார்கள். அதன்பிறகு, காட்டுக்குச் சூழ்ந்து சென்றவரெல்லாம் நீரிலே குளித்து முடித்து, அவனைப் பற்றிய நினைப்பும் நீங்கியவராய் மீள்வார்கள் என்கின்றார் திருமூலர் (Tirumular, 2017). இதனைப் பெரியாழ்வாரும்,

"சீயி னால்செறிந் தேறிய புண்மேல்

செற்ற லேறிக் குழம்பிருந்து, எங்கும்

ஈயி னாலரி ப்புண்டு மயங்கி"

எல்லை வாய்ச்சென்று சேர்வதன் முன்னம்" (பெரியாழ்வார்திருமொழி -4:5:2) என இவ்வுடல் நிலையில்லாதது, நோய்பட்டு அழியக்கூடியது. அப்படி அழியும்முன்னே 'ஓம் நமோ நாராயணா' என்று சொல்லுங்கள், பரமபதம் கிட்டும் என உலக மக்களை ஆற்றுப்படுத்துகிறார் (Swaminatha Iyer, 2018).

## செல்வம் நிலையாமை

வாழ்க்கை நிலையாத வாழ்வில் செல்வங்களும் நீங்கிப் போகும் என்பதை சீத்தலைச் சாத்தனார்,

"தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்

ஈற்றிளம் பெண்டி ராற்றாப் பாலகர்

முதியோ ரென்னா னிளையே ரென்னான்

கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பஇவ்

அழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்

கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து

மிக்க நல்லறம் விரும்பாது வாழும்

மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ" - (மணிமேகலை -6-97-104) (Swaminatha Iyer, 2008)

என்று கூறுவது போல தொண்டரடிப்பொடியாழ்வாரும் மனிதர்கள் வாழ்வும் செல்வமும் நிலையெனக் கருதி விரும்பி ஓடுபவரை தடுத்து அவர்களை நல்லறம்படுத்த பத்தியின் வழி அருள்மாரிப் பொழிந்தார், அவர் அன்பின் தொட்டு அருளாக மாறி கருணையாக வெளிப்பட்டதனால் அனைவரும் உய்வடைய வேண்டும் என்ற "கண்ணோட்டம்" கொண்டு நோக்கியதால் தனது திருமாலையில்,

"வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவ ரேலும்

பாதியு முறங்கிப் போகும் நின்றதில் பதினையாண்டு

பேதை பாலகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்

ஆதலால் பிறவி வேண்டே னரங்கமா நகரு ளானே (திருமலை-3) (Thiruvengada Ramanujadasan, 2018)

எனப் பெருந்துன்பங்கள் வந்து வாட்டுகிற இப்பிறவி நீங்கி இறையின்பம் எய்துகிற பிறவா வரம் வேண்டுங்கள் மானிடர்களே! எனத் தன்னுடன் சேர விளிக்கிறார், தொண்டரடிப் பொடியாழ்வார். திருச்சந்த விருத்தத்தில் இப்பிறவி இறப்பதற்கே. நிலையற்றது. அப்பரமபத வாசியான இறைவனைப் பற்றாமல் காலம் கடப்பது ஏனோ? என வினவும் திருமழிசையாழ்வார். "இன்று சாதல் நின்று சாதலன்றி யாரும் வையகத்து ஒன்றி நின்ற வாழ்தலின்மை கண்டு நீசரென் கொலோ" - (திருச்சந்த விருத்தம்-66) என்ற வினாவின் மூலம் மானிடர்களே! திரிவிக்கிரமனைப் பற்றுங்கள் என்பார் பரிந்து (Thiruvengada Ramanujadasan, 2018).

## சாதி வேறுபாடற்ற சமத்துவம்

மாறனின் மனம் என்று புகழப்படும் “ஆசாரிய ஹிருதயம்” என்ற நூலில் 85வது சூத்திரத்தில்

“மிலேச்சனும் பக்தன் ஆனால்,

சதுர்வேதிகன் அநுவர்த்திக்க அறிவு கொடுத்துக்

குலதெய்வத்தோடு ஒக்க பூஜை கொண்டு பாவனதீர்த்தப்

பிரசாதனாம் என்கிற திருமுகப்பாடியும்” (சூத்-85)

சாதி பிறப்பாலே தாழ்வு இல்லை. பக்திப் பிறப்பே உயர்வானது. சாதியிலே மிலேச்சனாக இருந்தாலும் பக்தனாக -பக்தி பரவசத்தால் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கும் அடியவனாக இருந்தால் அவனே பிராமணோத்தமன். அவனைக் குலதெய்வமாகக் கொண்டு அவன் திருவடிகள் அலம்பிய அந்தத் தீர்த்தத்தைப்பருகி அவன் உண்டு மீதம் வைத்த உணவை உண்டால் செருக்கு மிக்க உயர்குலத்தவரும் செருக்கு நீங்கி தூய்மை அடைவர், என்கிறது ஆசாரிய ஹிருதயம் (Rajasekaran, 1997). இப்படிக் கீழோர், மேலோர் எனப் பார்க்காத சமூகம் வைணவ சமூகம் என்பதை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் திருமங்கையாழ்வாரின் அருளிச்செயல்களைக் காண்போம்.

## திருமங்கை ஆழ்வாரின் சமநோக்குப் பார்வை

“கண்டாரை, கடல்மல்லைத் தலசயனத் துறைவாரை,

கொண்டாடும் நெஞ்சுடையா ரவரெங்கள் குலதெய்வமே” (பெரியதிருமொழி 2.6.4)

கடல்மல்லையிலே நிலக்கிடையாய்ப் பள்ளி கொண்டு அருளும் விட்டுணவை வணங்குபவரை, எனக்கு மட்டும் அல்ல எங்கள் குலத்துக்கே தெய்வங்களாவர் என்கிறார் திருமங்கை ஆழ்வார் (Gopalyyer, 2006). இதனில் இனபேத மற்ற மனித குல வாழ்வு புலனாகிறது. திருமங்கை ஆழ்வாரும் மனித இனம் தாழ்ச்சி உயர்ச்சி அற்றது என்று வாழ்ந்தவர். அவர் மேலும் “மற்றெல்லாம் பேசிலும் நின் எட்டெழுத்தும் கற்று நான் உற்றதும் உன்னடியார்க்கு அடிமை” அடியேன் உற்ற உறவாகத் தொடர்பு கொண்டிருப்பது உன்னுடைய அடியவர்களுக்கு அடிமைத் தொண்டு புரிவது மட்டுமே, இதனில் ஏதும் எனக்கு வேறுபாடில்லை, தொண்டக்குலம் முழுதும் வைணவக் குலமே என்ற சமநோக்குப் பார்வை காணுகிறார் ஆழ்வார் (Gopalyyer, 2006).

தொண்டனின் தொண்டன் திருமழிசையாழ்வார்

“மாறாய தானவனை வள்ளுகிரால், மார்விரண்டு

கூறாகக் கீறிய கோளரியை - வேறாக

ஏத்தி இருப்பாரை வெல்லுமே மற்றவரைச்

சாத்தி இருப்பார் தவம்.” (நான் முகன் திருவந்தாதி -18)

இனம், நிறம் பாராமல் இறைவனின் பக்தர்கள் யாராயினும் அவர்களைப் பற்றுங்கள். எடுத்துக்காட்டாக சத்ருக்கனன், மதுரகவிகள், வடுகநம்பி போன்று இறையடியார்களைப் பற்றுவீராயின் இறைவனைப் பற்றி வீடுபேறடையும் காலத்தைக் காட்டிலும் இவர்கள் பக்கமாக நாம் விரைவில் நற்பலனை அடைவோம் என்கின்றார் திருமழிசையாழ்வார் (Kamalakannan, 2001).

## இராமன் காட்டிய இன ஒற்றுமை

மனித இனத்தில் மட்டும் கீழ்மேல் பார்க்காத ஆழ்வார்கள் ஒரு படிமேலே போய் விலங்குகளிடமும் அம் மானுடப் பொருளை காண்கின்றனர். அதற்கு சாட்சியாக இராமன் அனுமனை நோக்கி, இவன் வாயுவின் மகன் என்றோ! விலங்கினத்தில் பிறந்தவனென்றோ! பல பொல்லாத குணங்களைக் கொண்ட குரங்கு என்றோ! அவனை இழிவுபடுத்தாமல், அவன் மீது கடல் போன்றது

தீராக் காதலைக் கொண்டு உன்னுடன் உடனிருந்து யான் உண்பேன், உறைவேன் என்று அனுமனைக் குறித்து கூறியருளிய "மேன்மை" எனக்கும் வேண்டும் என

"வாத மாமகன் மர்க்கடம் விலங்கு

மற்றோர் சாதியென் றொழிந்திலை, உகந்து

காதல் ஆதரம் கடலினும் பெருகச்

செய்த தகவினுக் கில்லைகைம் மாறென்று,

'கோதில் வாய்மையி னாயொடு முடனே

உண்பான் நான்' என்ற ஒண்பொருள் எனக்கும்

ஆதல் வேண்டுமென் றடியினை யடைந்தேன்

அணிபொழில் திருவரங்கத்தம் மானே!" -(பெரியதிருமொழி -5.8.2)

என்கிறார் (Thiruvengada Ramanujadasan, 2018). 'அடியார்கள் குலம் எம் குலம்' என்பார் நம்மாவார். இதனை,

"குலம் தாங்கு சாதிகள் நாலிலும் கீழ்இழிந்து எத்தன்ன

நலந்தான் இலாத சண்டாள சண்டாளர்கள் ஆகினும்

வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் மணிவண்ணற்கு ஆளென்று உள்

கலந்தார் அடியார் தம்மடியார் எம் அடிகளே" -(திருவாய்மொழி 3.7.9)

என்று அடியார் யார்? வணங்கத்தக்கவர் யார்? என்பவைகளைத் தெளிவுபடுத்துகிறார் நம்மாழ்வார் (Thiruvengada Ramanujadasan, 2018).

இவ்வெடுத்துக்காட்டுகளின் மூலம் குலம், சாதி, இழிவு உயர்வுகளைக் கடந்து நிற்பது தொண்டக் குலமான அடியார் குழு என்பது தெளிவாகும். தொண்டக்குல வாழ்க்கையை வாழ்ந்து, கடைபிடித்துக் காட்டியவர்கள் வைணவச் சான்றோர்கள்; வைணவ வரலாறு கூறும் குருபரம்பரை நிகழ்வுகளில் தொட்ட தொட்ட இடமெல்லாம் இவ்வுண்மையைக் காணலாம்.

## புற சமயம் போற்றும் புண்ணியர்கள்

மனிதர்களுக்கு வைணவ சமயத்தைப் புகட்ட வேண்டும் என்றுதான் ஆழ்வார்கள் முழுச் சிந்தனையோடு செயல்பட்டார்கள். அவ்வாறு ஒரு சமயக்கொள்கையில் வரும் பக்தர்கள் நடுவே சிவமதத்தைத் தழுவியவர்களோடு எப்பினக்கும் நேராமல் காப்பதற்கும் சில முயற்சிகளை மேற்கொண்டனர். அவற்றுள் பேயாழ்வார் பாடிய மூன்றாம் திருவந்தாதியில்

"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்

சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் -சூழல்

திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு

இரண்டுருவு மொன்றாய் இசைந்து" -(மூன்றாம் திருவந்தாதி -63.)

எனச் சிவனும் மாலவனும் ஒன்று என்ற பேச்சு "அரியும் சிவனும் ஒன்று" வழக்கினை உறுதிப்படுத்தி மதச்சண்டைகளும் பூசல்களும் ஏற்படா வண்ணம் ஒற்றுமையோங்க வேண்டும் என்ற நோக்கில் ஆழ்வார்கள் இருந்தனர் என்பது போற்றத்தக்கதாகும் (திருவேங்கட இராமானுஜதாசன், 2018).

## மானிடர்க்கு அறவுரை

உலகோர் உய்ய ஒரே வழி இறைவனைப் பற்றுதலே, இதனை அனைத்து சமயத்தாரும் வலியுறுத்துகின்றனர். அப்படிப்பட்ட இறைவனை மனத்திலே இருத்தி வழிபட்டு வருவோமாகில் இப்பிறவித் துன்பம் நீங்கி மீண்டும் இங்கு பிறவா நிலை கிடைக்கும். ஆதலின், இவ்வுடலில் இருந்து உயிர்போகும் முன் இறைவன் பெயரைக் கூறுங்கள், கூற்றுவனின் தூதர்கள் உங்களைத் துன்புறுத்த மாட்டார்கள் என்பதை,

"மார்வ மென்ப தோர் கோயில மைத்து

மாதவனென்னும் தெய்வத்தை நாட்டி

ஆர்வமென்பதோர் பூவிட வல்லார்க்

கரவ தண்டத்தி லுய்யலு மாமே" (பெரியாழ்வார் திருமொழி 4.5.3)

இவ்வாறு பாடுகிறார், பெரியாழ்வார் (Thiruvengada Ramanujadasan, 2018). இது மட்டுமின்றி பிள்ளையைப் பெறுகிற தாய்மார்கள் தான் முக்திபேறு அடைய வேண்டுமெனின் அப்பிள்ளைக்கு இறைவனின் நாமங்களிலே ஒன்றை பெயராக வைத்து அழைப்பாளாகில் அவள் வேறொன்றும் செய்ய வேண்டியதில்லை. இது ஒன்றேபோதும் என "கேசவன் பேரிட்டு நீங்கள் தேனித் திருமினோ நாயகன் நாரணன் தம்மன் னைநர கம்புகாள்" - (பெரியாழ்வார் திருமொழி-4.6.1) என்கிறார் (Thiruvengada Ramanujadasan, 2018). மனிதர்கள் மீது தீரா அன்பு கொண்ட ஆழ்வார்கள், இது ஆழ்வார்களின் அருள்வுரை மட்டுமல்ல அறவுரையாகவே எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

## விருந்தோம்பலும் பக்தியே

ஒரு இல்வாழ்வான் தன் மனைவியோடு வீட்டில் இருந்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தோம்பல் செய்வதற்கே என்பார் வள்ளுவப் பெருந்தகை (Parimelalhagar, 2004).

"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி

மிச்சில் மிசைவான் புலம்" -(குறள் -85)

என்று விருந்தின் மேன்மையைக் கூறுதல் போல

"காசின் வாய்க்கரம் விற்சிலும் கர

வாது மாற்றிலி சோறிட்டு

தேசவார்த்தைப டைக்கும் வண்கையி

னார்கள் வாழ்திருக் கோட்டியூர்" -(பெரியாழ்வார் திருமொழி-4.4.10)

திருக்கோட்டியூரில் வாழும் மக்கள், ஒரு பொற்காசுக்கு ஒரு பிடி நெல் விற்கும் கொடும் பஞ்ச காலத்திலும், தம்மிடமுள்ள பொருட்களைப் பின்பு தமக்கு வேண்டு மென்றெண்ணி மறைத்து வைக்காமல், பதிலுதவி எதையும் எதிர்பார்க்காமல் வருகின்ற விருந்தினருக்கு சோறாகிய உணவை அளித்து உபசரித்து அயல் நாட்டவரும் பாராட்டும் வண்ணம் வள்ளன்மை உடையவர்களாக வாழ்வர் என்று பெரியாழ்வார் மக்களின் விருந்தோம்பற் சிறப்பினை கூறுதல் விருந்தோம்பலில் ஆழ்வார்களுக்குள்ள பற்று அறியப்படுகிறது (Thiruvengada Ramanujadasan, 2018).

திருவரங்கரத்தில் வாழும் அந்தணர்கள் தூய வெண்ணிறமான ஆடையை அணிந்திருப்பர். தங்களின் மூவகை வேள்விக் கடமைகளையும் செய்வர். மேலும் இவ்வேதியர்கள் அங்கு வரும் விருந்தினர்களை உபசரிக்கும் மேன்மையுடையவர்கள். என்பதை,

"மறைபெருந்தீ வளர்த்திருப்பார்

வருவிருந்தை யளித்திருப்பார்

மறையவர் வாழ்

திருவரங்க மென்பதுவே" -(பெரியாழ்வார் திருமொழி.4.8.2)

பாடுவதின் வாயிலாகவும் ஆழ்வார்களின் விருந்தோம்பும் மனிதமாண்பின் நோக்கம் வெளிப்படுகிறது (Thiruvengada Ramanujadasan, 2018).

## அன்பே வைணவம்

பத்திக்கு" திருந்திய அன்பு" என்று பெயர். மாணிக்க வாசகரது பத்தியைப் பற்றிக் கூறும்போது

"திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்"

(திருவிடை மருதூர் மும்மணிக்கோவை 28.31) [22]

என்று பட்டினத்தடிகள் பாடியுள்ளார். பக்திப் புலவர்கள் திருந்து மொழிப் புலவர்கள் எனப்பட்டனர் (Anandhi, 2018). பக்தி நூல்களைக் கொண்ட தமிழச் சங்கம் திருந்து நூல் சங்கம் எனப்பட்டது. இதனை

"கண்ணுதற் கடவுள் அண்ணல் அம்குறுமுனி

முனைவேல் முருகன் என இவர் முதலிய

திருந்து மொழிப் புலவர் அருந்தமிழ் ஆய்ந்த சங்கம்" (பரிபாடல் உரைச்சிறப்புப்பாயிரம்)

என்ற வரிகள் உரைக்கின்றன (Swaminatha Iyer, 2018). "அன்பே கடவுள்" என வாழ்ந்தவர்கள் ஆழ்வார்கள். அதனினும், அஞ்சுக்குடிக்கு ஒருத்தியாய் பிறந்து" சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாள் தனது திருப்பாவையில் பாவை நோன்பின் போது தவப்பேறு நமக்கு கிட்டும் அடியார்களுக்கு அதாவது மக்களுக்கு என்ன கிட்டும் என்ற அன்பின் மேலீட்டால், நோன்புகாலத்தில் தான தருமங்கள் செய்ய வேண்டும் "ஐயமும் பிச்சையும்" இன்னார் இனியர் என்று பாராது பிரமசாரிகள் மற்றும் துறவிகளுக்கு அளியுங்கள் என்பாள். இதனையே தமிழ் மூதாட்டி "ஐயமிட்டு உண்" என்பார்.

இயன்ற அளவு உங்களால் முடிந்த அளவு "ஆந்தனையும்" என்று கூறி "கை காட்டி" என்றது, இல்லை என்று கை காட்டாமல், இருக்கும் இடத்தையாவது கூறி அங்கேயாவது அனுப்புங்கள். கைகொள்கிற அளவாவது தருமம் செய்யுங்கள் என்று மற்ற உயிர்கள் மீது அன்பு காட்டி உய்ய வழி சொன்னவர்கள் ஆழ்வார்கள் என்பது ஆண்டாளின் பாடல்கள் மூலம் தெளிவாகிறது. [(24)]

## ஆழ்வார்களின் கற்பியல் பார்வை

கற்பு என்பது ஆண், பெண் இருபாலருக்கும் பொது என்பார் தந்தை பெரியார்.

மகளிரெல்லாம் கல்வியறி வொழுக்க முள ராயின்

மருத்துவமே வேண்டாவாம், பிணி மூப்பு வாரா

என்பார் பாவேந்தர் பாரதிதாசன் (Bharathidasan, 2018). தனது குடும்ப விளக்கில் அவர் மேலும் தன் கவிதைத் தொகுப்பில்,

"தயிர் விற்க மட்டுந்தான்!

மோர் விற்க மட்டுந்தான்!

உயிர் விற்க என் மனந்தான்"

உடன்படுமா சொல்லத்தான் என்று கற்பினை உயிர் என்பார் (Bharathidasan, 2012).

"உன்பெருந் தேவி யென்னு முரிமைக்கு முன்னைப்பெற்ற

மன்பெரு மருகி யென்னும் வாய்மைக்கு மிதிலை மன்னன்

தன்பெருந் தனயை யென்னுந் தகைமைக்குந் தலைமை சான்றாள்"

சீதை தன் தகுதியினால் முதன்மையுற்று, தான் பிறந்த குலத்துக்கும், புக்ககுலத்துக்கும், கணவனது சிறப்புக்கும் ஏற்பச் சிறந்தவொழுக்கமுடையவளாய் அசோகவனத்திலே இருக்கின்றாள் (Gopalakrishnamachariyar, 2017). அக்கற்பினுக்கினியாளை என் கண்களால் கண்டேன் என்பான் அனுமன் இராமனிடம். இதுபோல ஆழ்வார்களும் கற்பின் மேன்மைத்துவத்தை

"கண்டாரி கழ்வனலே காதலன்றான் செய்திடினும்

கொண்டானை யல்லால றியாக்கு லமகள்போல்"

(பெருமாள் திருமொழி -5.2)

என்பார் குலசேகராழ்வார் (Govindhan, 2017). இதனையே வள்ளுவப் பெருந்தகையின்

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மையுண் டாகப் பெறின்"- (குறள்-54)

என்னும் குறளிலும் காணலாம் (Parimelalhagar, 2004).

## முடிவுரை

ஆழ்வார்கள் பன்னிருவரும் இறைபக்தியிலேயே ஆழ்ந்து கிடந்து இனிய பாசுரங்கள் "நாலாயிரம்" அருளியதன் நோக்கம், சமுதாயத்தில் மலிந்து கிடந்த கேடுகளைப் போக்கி, மனிதர்களை திருத்திப் பணிகொள்வதே. சமுதாயத்தில் எதுவும் அழிந்து போகலாம். ஆனால் நற்குணங்கள் போயின் நாடே நலிந்து விடும் என்பதைத் தெரிந்து தனிமனிதனின், இல்லரத்தானின், நற்பண்புகள், நற்குணங்கள் நிலைத்து நிற்க தீய எண்ணங்களைப் போக்க தெய்வபக்தியே சிறந்த வழி எனக் கண்டு போதனைகள் செய்து, ஆழ்வார்களும் தொண்டு செய்து வாழ்ந்து காட்டிச் சென்றனர். ஆகவே, நாமும் பயனற்ற செயல்களைச் செய்யாமல் "செய்யாதன செய்யோம், தீக்குறளைச் சென்றோதோம்" "பயனல்லன பயனில்லை மனமே" எனத் தெரிந்து மானுட சமுதாயத்திற்கு நல்லதையே மனம், மெய், மொழிகளால் சிந்தித்து செயல்பட்டு ஆழ்வார்கள் வழிநின்று மனிதம் காத்து வாழ்வோமாக!

## References

Anandhi, (2018) Thiruvidaimaruthur Mummanikovai, 1st edition, Saratha Pathippagam, Chennai, India.

Bharathidasan, (2012) Bharathidasan Kavithaigal, 1st edition, Ramaiya Pathippagam, Chennai, India.

Bharathidasan, (2018) Kudumbavilakku, 8th edition, Saratha Pathippagam, Chennai, India.

Gopalakrishnamachariyar, Vai.Mu, (2017) kamparaamaayanam, 3rd edition, Uma Pathippagam, Chennai, India.

Gopalyyer, T.V, (2006) Periya Thirumozhi, 1st edition, Thanjavur, India.

Govindhan, Tha., (2017) Naalayira Divya Prabandham, 2nd edition, Saratha Pathippagam, Chennai, India.

Kamalakannan, R, V., (2001) Naalayira Divya Prabandham, 3rd edition, varthamanan pathippagam, Chennai, India.

Naalayira Divya Prabandham (2007), 6th edition, Vijayaraghavachariar pubshier, Chennai, India.

Parimelalhagar, (2004) Thirukkural Parmelazhagar Urai, 5th Edision, Saratha Pathippagam, Chennai, India.

Periyavachan pillai, (1996) Thirumaalai, 3rd edition, Krishnaswami Aiyangar, S., trichy, India.

Rajasekaran, R., (1997) Acharya Hrudayam, 1st edition, Paththini kottam pathippagam, Poompuhar, India.

Swaminatha Iyer, U, V., (2008) Manimekalai, 8th edition, U, V, Sa., Library, Chennai, India.

Swaminatha Iyer, U, V., (2018) Paripadal, 8th edition, U, V, Sa., Library, Chennai, India.

Thiruvengada Ramanujadasan, T., (2018) Naalayira Divya Prabandham, 3rd edition, Uma Pathippagam, Chennai, India.

Tirumular, (2017) Tirumantiram, 5th edition, Saratha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License